# THAI TAMIL KALAI VIZHA – 2023-2024

## INVITATION

நாடார் மஹாஜன சங்கம்

**சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரி**

அவனியாபுரம், மதுரை – 625 012.

தேசிய தர நிர்ணய மதிப்பீட்டில் "B" தகுதி பெற்றது.

✆ 72000 61388, 72000 51388

**29th**

**SINCE 1995**

**தாய்த்தமிழ்க் கலை விழா**
**வெள்ளி விழா 2023**

அன்புடையீர்,

வணக்கம்.

நிகழும் சோபகிருது வருடம் ஆடித்திங்கள்
26 ஆம் நாள் (11-08-2023) வெள்ளிக்கிழமை
காலை 10.00 மணியளவில்

**தாய்த்தமிழ்க் கலைவிழா**

எம் கல்லூரி வளாகத்தில் சிறப்பாக
நடைபெற இருக்கின்றது.

தாங்கள் விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்திட
அன்புடன் அழைக்கின்றோம்.

**கல்லூரி நிர்வாகக் குழு, முதல்வர்,**
**கல்லூரியின் தமிழ்த்துறை விரிவுரையாளர்கள்**
**மற்றும் மாணவியர்கள்**

# AGENDA



## நிகழ்ச்சி நிரல்

### தொடக்க விழா

10.05 a.m. : தமிழ்த்தாய் வாழ்த்து

10.10 a.m. : திருவிளக்கேற்றுதல்

**வரவேற்புரை**

திருமதி. **க. பாண்டிச்செல்வி** M.A.,M.Phil.,B.Ed., D.G.T.,
தமிழ்த்துறைத் தலைவர்

**தலைமையுரை**

திரு. **T.மோகன்,** கல்லூரித்தலைவர்

**முன்னிலை & வாழ்த்துரை**

திரு. **M. ஜெயக்குமார்** B.E.,
செயலாளர் & தாளாளர்

திரு. **A.C.C. பாண்டியன்,** பொருளாளர்

திரு. **T. குழந்தைவேல்,** துணைத்தலைவர்

திரு. **T. ராமு,** துணைத்தலைவர்

திரு. **G. கணேசன்,** துணைத்தலைவர்

திரு. **V.K.V. பாலகுரு,** இணைச்செயலாளர்

முனைவர் **G.மாரீஸ்குமார்** M.A.,M.Phil.,M.T.M.,Ph.D.,
ஆலோசகர்

திரு. **G. கரிக்கோல்ராஜ்**
பொதுச்செயலாளர், நாடார் மஹாஜன சங்கம்

திருமதி. **D. கார்த்திகாராணி** M.Sc.,M.Phil.,CGT.,Ph.D.,
முதல்வர் (பொ)

**சிறப்பு விருந்தினர்** : முனைவர் **ச.ஜெயஸ்ரீ,**
தமிழ்த்துறைப் பேராசிரியர்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி,
பசுமலை, மதுரை.

11.30 a.m. : **போட்டிகள் துவக்கம்**

1.00 p.m. : **மதிய உணவு**

2.30 p.m. : **பரிசு வழங்குதல்**

நன்றியுரை : திருமதி. **இரா. முத்துக்கனி** M.A.,M.Phil.,CGT.,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்

**நாட்டுப்பண்**

PHOTO






# REPORT

நா.ம.ச. சோமத்தாய் வாசன் மகளிர் கல்லூரி -மதுரை

தமிழ்த்துறை

"தாய்த்தமிழ் கலைவிழா – 2023"

நாடார் மஹாஜன சங்கம் சோமத்தாய் வாசன் மகளிர் கல்லூரியில் தமிழ்த்துறை சார்பாக, 25-ஆம் ஆண்டு வெள்ளி விழா "தாய்த்தமிழ் கலைவிழா – 2023", 11.08.2023 அன்று காலை 10 மணியளவில் கல்வித்தந்தை இராஜா கே.எஸ்.பி.கணேசன் கலையரங்கக் கூடத்தில் சீரும் சிறப்புமாக தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கப்பட்டது. இவ்விழாவில் தமிழ்த்துறைத் தலைவி திருமதி. க.பாண்டிச்செல்வி அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

கல்லூரி துணைத்தலைவர் திரு T.குழந்தை வேல் அவர்கள் "தமிழின் பெருமை அளப்பரியது" என அதன் சிறப்பை கூறி நிகழ்ச்சி சிறக்க தன் வாழ்த்துகளையும் வழங்கினார். கல்லூரி முதல்வர்(பொ) திருமதி D.கார்த்திகாராணி அவர்கள் **"தாய்த்தமிழ் கலைவிழா, கல்லூரி பெருவிழா என்றும் 25-ஆம் ஆண்டு வெள்ளி விழா காணும் இவ்விழா நூற்றாண்டு காண வேண்டுமென"** வாழ்த்தினார். கல்லூரி தலைவர் T.மோகன், செயலாளர் திரு.M.ஜெயக்குமார், பொருளாளர் திரு. A.C.C.பாண்டியன் துணைத்தலைவர்கள் திரு T.இராமு, திரு.G.கணேசன், இணைச்செயலாளர் திரு.V.K.V பாலகுரு, கல்லூரி ஆலோசகர் முனைவர்.G.மாரீஸ்குமார், மற்றும் நாடார் மஹாஜன சங்க பொதுச்செயலாளர் திரு.G கரிக்கோல்ராஜ் ஆகியோர்கள் தங்கள் வாழ்த்துகளை தெரிவித்தனர்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர். ச.ஜெயஸ்ரீ அவர்கள். **"கோயிற்கலைகளில் சிற்பம்"** என்னும் தலைப்பில். **"கோயிற்கலையின் தொன்மையையும் சிற்பக்கலையின் மகத்துவத்தை எடுத்துக்கூறியதோடு, நம்நாட்டின் பெருமை பேசும் சிற்பக்கலையை அழியாது பாதுகாக்க வேண்டும்"** என்று மாணவ சமுதாயத்தினருக்கு அறிவுறுத்தும் விதமாக சிறப்புரை வழங்கினார்.

கல்லூரியின் இப்பெருவிழாவில், திருமதி.S.பூமா,S.I காவல்துறை அதிகாரி அவர்கள் போதை பழக்கங்களை ஒழிக்கும் நோக்கத்தில் உறுதிமொழி ஏற்க வைக்கும் விழிப்புணர்வு நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்களென ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்தகொண்டனர். இந்நிகழ்வில் தமிழ்த்துறையின் முன்னாள் பேராசிரியர் திருமதி.மீ.முத்துராணி அவர்கள் தாய்த்தமிழ்க்கலை விழாவிற்கு தாம் வித்திட்ட தன்மையை பகிர்ந்து கொண்டார். அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி 25-ஆம் ஆண்டு வெள்ளி விழா நினைவுப் பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், "11 கல்லூரிகளும் 200-க்கும் மேற்பட்ட மாணவிகளும் 15 பேராசிரியபெருமக்களும் கலந்து கொண்டனர். இவ்விழாவில் பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், ஆய்வுத்தாள் சமர்ப்பித்தல், வினாடி வினா, ரங்கோலி, நிலைக்காட்சிப்படுத்துதல், போன்ற ஆறு போட்டிகளிலும் சிறப்பாக செயல்பட்டு முதலாம் பரிசை அய்ய நாடார் ஜானகியம்மாள் கல்லூரி மாணவிகள் பெற்றனர். போட்டிகளில் பங்குபெற்ற அனைத்து கல்லூரிகளுக்கும் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. இந்நிகழ்வின் நிறைவாக தமிழ்த்துறை உதவிப்பேராசியர் திருமதி.இரா.முத்துக்கனி அவர்கள் நன்றியுரை நவில, விழா நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவடைந்தது.

K. Pandi... | D. Karthy... Ra...
---|---
தமிழ்த்துறைத்தலைவர் கையொப்பம் | முதல்வர்(பொ) கையொப்பம்